சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.198/2018

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபாகர் | வயது | 42 |
| த/பெ | மாணிக்கராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ஆலங்கொம்பு | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | வியாபாரம் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :

சிக்கதாசம்பாளையம் கிராமத்தில் உள்ள புல எண்.749 ல் எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் உள்ளது என்றால் 6 ஏக்கர் உள்ளது. புல எண்.746 ல் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் உள்ளது என்றால் 1 ஏக்கர் உள்ளது. இது போக எவ்வளவு நிலங்கள் எனக்கு பாத்தியம் உள்ளது என்றால் மொத்தமாக எனக்கு 6 ஏக்கர் உள்ளது. ஒவ்வொரு புல எண் வாரியாக எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று தெரியாது. புல எண்.746 ன் தென் புறம் பள்ளவாரி உள்ளது என்றால் சரி தான். அந்த பள்ளிவாரியில் இருந்து புல எண்.746 பூமிக்கு வரலாம் என்றால் சரி தான். புல எண்.746 ல் இருந்து புல எண்.748 பூமிக்கு வரலாம் என்றால் சரி தான். புல எண்.748 ல் இருந்து புல எண்.749 க்கு போகலாம் என்றால் சரி தான். புல எண்.749 க்கு வடபுறம் வேறு நிலம் எதுவும் இல்லை என்றால் சரி அல்ல. வேறு ஒரு பூமி உள்ளது. அந்த வேறு ஒரு பூமிக்கு வட புறம் காப்புக் காடு உள்ளது என்றால் காடு உள்ளது. ஆனால் காப்புக் காடு இல்லை. புல எண்.746 க்கு எந்த திசையில் புல எண்.747 உள்ளது என்றால் மேல் புறம் உள்ளது. புல எண்.746 மற்றும் 747 க்கு தென் புறம் தான் பள்ளவாரி உள்ளது என்றால் சரி தான். புல எண்.729 ஆன

பள்ளவாரியில் இருந்து புல எண்.747 க்கு செல்லும் தென் வடல் பாதை தான் தற்போது தாவா என்றால் சரி தான். புல எண்.747 க்கு தொட்ட வட புறம் புல எண்.748 பூமி உள்ளது என்றால் சரி தான். புல எண்.748 க்கு தொட்டு அடுத்த வட புறம் தான் புல எண்.749 உள்ளது என்றால் சரி தான். புல எண்.749 க்கான கிரைய ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது. புல எண்.749 ற்கான வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது. நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணங்களின் அடிப்படையில் தான் வருவாய் ஆவணங்களை என் பெயரில் மாற்றினேன் என்றால் சரி தான். புல எண்.749 ற்கான பட்டா எண்.1522 என் பெயரில் உள்ளது என்றால் சரி தான். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த பட்டா என்றால் சரி தான். அது வா.சா.ஆ.13. என்னிடம் காட்டப்படுவது தான் புல எண்.749 ற்கான புல வரைப்படம் என்றால் சரி தான். அது வா.சா.ஆ.14. அந்த வரைப்படத்தில் புல எண்.749/1B தென் வடல் ஆக உள்ள தடமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். புல எண்.749/1B தெற்கில் தொடங்கி வடக்கில் புல எண்.749 ல் பூமியிலேயே முடிவடைகிறது என்றால் சரி தான். அதற்கு வடபுறம் வேறு பூமி எதுவும் இல்லாமல் காடு தான் உள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.13 ஆன பட்டா எண்.1522 புல எண்.749/1B க்கான வருவாய் ஆவணம் என்றால் சரி தான். வா.சா.ஆ.13 என் பெயரில் மட்டுமே உள்ளது என்றால் சரி தான். புல எண்.749/1B எனக்கு உரிமை பட்ட பூமி என்றால் சரி தான். அது தான் வழித் தடம் என்றால் வழித் தடம் பாகம் 2 ல் தான் உள்ளது. வா.சா.ஆ.11 ல் 1B என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அதன் விஸ்தீரணமும் வா.சா.ஆ.13 ன் படி 4 ஏர்ஸ் என்றால் சரி தான். வா.சா.ஆ.14 ன் படி புல எண்.749/1B என்றால் சரியாக தெரியவில்லை. ஆவணங்களை பற்றி நன்கு தெரிந்து கொண்டே நீதி மன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல.

என்னிடம் காட்டப்படுவது பட்டா எண்.1679 என்றால் சரி தான். அது வா.சா.ஆ.15. அந்த பட்டா எண் புல எண்.748/2 க்கானது என்றால் சரி தான். புல எண்.748/2 ன் மொத்த விஸ்தீரணம் 7 ஏர்ஸ் என்றால் சரி தான். அதுவும் தென் வடல் பாதை என்றால் சரி தான். என்னிடம் காட்டப்படுவது தான் புல எண்.748/2 ற்கான புல வரை படம் என்றால் சரி தான். அது வா.சா.ஆ.16. புல எண்.748/2 தென் வடல் பாதைக்கு தொட்டு அடுத்த கிழ புறம் புல எண்.746 உள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.15 ல் அதன் உரிமையாளர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அதில் என் பெயரோ வாதி பெயரோ இல்லை என்றால் சரி தான். நான் கிரையம் பெற்ற பாலசுப்ரமணியன் என்பவரின் பெயர் உள்ளது. சாட்சி தானாக பழைய ஆவணங்களில் பொது இட்டேரி வழி என்று தான் உள்ளது. அதன் பின்னர் அவரவர் பெயருக்கு மாறி உள்ளது எனக்கு தெரியாது. அந்த வழியை நாங்கள் எங்கள் சொந்த வழியாக பயன்படுத்தவில்லை. பொது வழியாகத் தான் பயன்படுத்துகிறோம். புல எண்.749 க்கு வட புறம் காப்பு காடு உள்ளதால் பொது மக்கள் யாரும் அந்த பாதையை பயன்படுத்தி காப்புக் காட்டிற்குள் செல்ல மாட்டார்கள் என்றால் சரி அல்ல. தற்போதும் பயன்படுத்தி வருகிறார்கள். என்னிடம் காட்டப்படுவது தான் புல எண்.747 க்கான புல வரை படம் என்றால் சரி தான். அது வா.சா.ஆ.17. அந்த வரை படத்தில் வழித் தடம் புல எண்.729 ல் தொடங்கி புல எண்.747 ன் கிழக்கு ஓரத்தில் புல எண்.747/2 ல் தென் வடல் ஆக செல்கிறது என்றால் சரி தான். என்னிடம் காட்டப்படுவது தான் பட்டா எண்.745 என்றால் சரி தான். அது வா.சா.ஆ.18. அதில் புல எண்.747/2 ன் விஸ்தீரணம் 4 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அதில் உரிமையாளர் பெயரில் வாதி சண்முக சுந்தரத்தின் பெயரும் உள்ளது என்றால் சரி தான். புல எண்.747 ல் எனக்கு எந்த பூமியும் இல்லை என்றால் சரி தான். நான் பாலசுப்ரமணியத்திடம் இருந்து புல எண்.747 ஐ எந்த ஒரு கிரைய ஆவணத்தின் மூலமாக கிரையம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் புல எண்.729 பள்ள வாரியில் தொடங்கி தென் வடலாக புல எண்.749/2B வரை தென் வடல் பாதை செல்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஓம்/- கா.கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.